நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## தரம்: உயர்நிலை

*December 2007*

வினாக்கள் : 65

வழங்கப்படும் நேரம் : 75 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 1 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு மிகச்சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

## கருவிலே திருவுடையார்!

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்!
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்!

என, சிலப்பதிகாரம் மழையைப் போற்றுகிறது. மழை வேண்டி இந்திரனுக்கு விழா எடுப்பது பழைய மரபு. இந்த இந்திரவிழா பற்றி முத்தமிழ்க் காவியமான சிலப்பதிகாரம் மூலமும் அறிகிறோம். அரங்கேற்றத்தில் அகக்கூத்துகளை ஆடிய மாதவி இந்திரவிழாவில் பதினொருவகைப் புறக்கூத்துகளை ஆடுகிறாள். தற்காலத்தில் ஈழத்திலும் வல்வையூர் இந்திரவிழாக் கொண்டாடி மகிழ்ந்திருக்கிறது என்பது எம்மில் பலருக்குப் புதிய செய்தியாகும். காவிரிப்பூம்பட்டினம் நெய்தல் நிலம், வாணிகத்துடன் கலைகளையும் வளர்த்தது. நெய்தல் நிலமான வல்வையும் வாணிகத்துடன் ஆடல், பாடல், நாடகக் கலைகளையும் வளர்த்தது என்று, வல்வை மனோகரன் தம்பதியினரின் பிள்ளைகளான கண்ணன், கீதா ஆகியோரின் அரங்கேற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வந்திருந்த அண்ணாவியார் இளைய பத்மநாதன் பெருமைப்பட்டுக் கொண்டார்.

ஒரு கலைப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் கண்ணனும் கீதாவும்!. ஐந்து தலைமுறையாக அவர்களின் தாய் தந்தையர் வழியில் கூத்தும், நாடகமும், நடனமும் வளர்ந்திருக்கின்றன. இத்தகையதோர் பின்புலத்திலிருந்து வந்த இக்குழந்தைகள் தங்களின் குரு திருமதி உஷா கருணாகரனின் சிறப்பான வழிகாட்டலில் அரங்கம் நிறைந்த ரசிகர் முன்னிலையில் இம்மாதம் (ஒக்ரோபர்) 27ம் திகதி தமது அரங்கேற்றத்தை நிகழ்த்தி எல்லோரையும் மகிழ்வித்தனர்.

பிரதம விருந்தினராக வந்திருந்த அண்ணாவியார் இளைய பத்மநாதன் அவர்களின் சிறப்புரை இந்நடன நிகழ்வுக்கு மகுடம் போல் அமைந்து விட்டது. ‘இங்கிருந்து எங்கே’ என்ற தலைப்பில் நடனம் பற்றிய தேடுதலை கலைஞர்கள், இரசிகர்கள் நிறைந்த சபையில் சிந்தனையைத் தூண்டும் விதமாக எழுப்பியது பொருத்தமாகத் தெரிந்தது. ‘அரங்கேற்றம்’ ஒரு மார்க்கம், குரு சிஷ்ய பரம்பரையில் அது வருகிறது. அது தொடரட்டும், ஆனால் அரங்கேற்றத்தின் பின் என்ன செய்யப்போகின்றோம் என்று நடனமாடுபவர்கள் தம்மைத் தாமே கேட்கவேண்டிய வேளை வந்துவிட்டது என்பதை, தன்னைத்தானே கேட்பது போலக் கேட்டார்.

வெறுமனே ஒரே விஷயத்தை மீண்டும் மீண்டும் ஆடாமல், கொஞ்சம் ‘அகத்தை’ விட்டு வெளியே வந்து ‘புறத்தையும்’ ஆடுங்கள், ‘புதிய புறம்’ படையுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார். தமிழ் மக்களின் சொத்து பரதம். சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை கூறுவதைப் பாருங்கள் - அதிலே வரும் இசை, நடன இலக்கணத்தை ஆராயும் பொழுது, பரதமுனியும், நாட்டிய சாஸ்திரமும் பரதக் கலையின் தோற்றுவாயல்ல என்று துணிந்து கூறமுடியும் என்றார். நாங்கள் எங்களை மீள் பரிசோதனை செய்யவேண்டிய ஒரு காலகட்டத்தில் இருக்கிறோம், எங்கள் வேர்களைத் தேடிச்செல்ல வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

நன்றி : பதிவுகள் இணையத் தளம் - பராசக்தி சுந்தரலிங்கம்

.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

## வினாக்கள் 1-5: பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. பின்வருவனவற்றில் சரியான கூற்று அல்லாதது எது?

   (a) தமிழரின் சொத்து பரதக்கலை
   (b) ஈழத்து வல்வையூரிலும் இந்திரவிழா கொண்டாடப்பட்டது.
   (c) மழைவேண்டி இந்திரனுக்கு விழா எடுப்பது மரபு.
   (d) காவிரிப்பூம் பட்டினம் மலைப் பிரதேசமாகும்.

2. பின்வருவனவற்றுள் மிகச் சரியான கூற்று?

   (a) சிலப்பதிகாரத்தில் மாதவியின் அரங்கேற்றம் நடைபெற்றது
   (b) கண்ணனும் கீதாவும் பதினாறு வகைப் புறக்கூத்துகளை ஆடினர்
   (c) இருவரினதும் அரங்கேற்றம் அடுத்தமாதம் நடைபெற இருக்கிறது
   (d) இவை எல்லாம் சரி.

3. அண்ணாவியார் இளைய பத்மநாதன் பற்றிய கூற்றுகளுள் பொருத்தமற்றது.

   (a) அவரின் சிறப்புரை சிந்தனையைத் தூண்டும் விதமாக அமைந்தது
   (b) அரங்கேற்றத்தின் பின் என்ன செய்யப்போகிறோம் என அண்ணாவியார் அண்ணாவியார் கேள்வி எழுப்பினார்
   (c) அவர் அரங்கேற்றத்தில் தலைவராகக் கலந்து கொண்டார்
   (d) அவரின் உரை நடன நிகழ்வுக்கு மகுடம் போல் அமைந்தது

4. அண்ணாவியார் இளைய பத்மநாதன் வேண்டிக்கொள்வது.

   (a) எல்லோரும் நடனம் பயின்று அரங்கேற்றம் செய்யவேண்டும்.
   (b) நடனம் அரங்கேற்றம் செய்பவர்கள் தொடர்ந்தும் ஆடவேண்டும்.
   (c) மாதவியைப் போல பதினாறு வகை அகக்கூத்துகளை ஆடவேண்டும்
   (d) ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் ஆடாமல் அகத்தை விட்டு கொஞ்சம் புறத்தையும் ஆடவேண்டும்.

5. அண்ணாவியாரின் உரையினினரும் நாம் அறிந்து கொள்வது
   அ. பரதக்கலையின் தோற்றுவாய் பரத முனியும் அவரின் நாட்டிய சாத்திரமும்.
   ஆ. நாங்கள் எங்களை மீளபரிசோதனை செய்யவேண்டும்.
   இ. எங்கள் கலைகளின் தோற்றம் எது என்பதை தேடிச்சென்று அறியவேண்டும்.

இவற்றில்
   (a) அ வும் ஆவும் சரி
   (b) ஆவும் இயும் சரி
   (c) அ மட்டும் சரி
   (d) இவை எல்லாம் சரி

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 6-10: பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

புலம்பெயர் வாழ்வும் நாமும்

நாம் புலம்பெயர்ந்து வாழும் தலைமுறை. எமது பெற்றோர்கள் தமது தாயகத்திலிருந்து பொருள் தேடியோ, வளமான வாழ்க்கையை நாடியோ வந்தவர்கள் என்று தான் நம்மில் சிலர் நினைக்கிறோம். அது முற்றிலும் சரியல்ல. குறிப்பாக இலங்கையிலிருந்து வந்தவர்கள் தமக்கும் தமது குடும்பத்துக்கும் உயிர் அச்சுறுத்தல் இருந்ததினாலேயே புலம்பெயர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய இடத்தில் புதிய சூழலில் நாம் வேர்விடத் தொடங்கிவிட்டோம். எனினும் எமது தாயகத்தை நாம் மறந்துவிடலாகாது.

தமிழகத்தில் இன்னமும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் தொகை ஏராளம். ஒரு வாய் சோற்றுக்கே வழி இன்றி, இருக்க இடம் இன்றி, உடுக்க உடை இன்றி அல்லல்படுவோர் அனேகர். அடிப்படை சுகாதார வசதிகள் எவையும் இல்லாமல் இம்மக்கள் வாடுகிறார்கள்.

ஈழத்தில் மேற்சொன்ன பிரச்சனைகளுடன் மக்களுக்கு இன்னுமொரு பிரச்சனை உண்டு. அதுதான் உயிர் அச்சுறுத்தல். அங்கு நடைபெறும் போரினால் மக்களின் அன்றாட வாழ்க்கையே நிம்மதியற்றுப் போகிறது. எந்நேரமும் வானிலிருந்து குண்டுகள் வந்து வீழலாம் என்ற நிலை. அத்தியாவசியப் பொருட்களுக்கும் மருந்துப் பொருட்களுக்கும் தடை நிலவும் அம்மண், மரணங்கள் மலிந்த பூமியாகிவிட்டது.

இத்தகைய நிலையில் வளர்ச்சியடைந்த நாடொன்றில் வாழும் நல்வாய்ப்புப் பெற்ற நாங்கள் என்ன செய்யவேண்டும்? நாம் எமது அடிப்படைத் தேவைகளை விட்டுவிட வேண்டியதில்லை. எனினும் எமது உறவுகளுக்கு ஏதாயினும் ஒரு வழியில் நாம் உதவலாமல்லவா? நாம் வாழும் நாட்டில் எம்மை நாம் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். எல்லோரும் ஒன்றுபடவேண்டும். இந்நாட்டின் பொருளாதாரம், பண்பாடு, கலை போன்ற துறைகளில் நாம் காத்திரமாக பங்களிப்பதுடன் எமது சமூகம் பற்றியும் சிந்திக்கவேண்டும். தமிழரின் நலன்நோக்கி நாம் இன்று ஒன்றுசேரவேண்டும். இப்போது நாம் என்ன செய்கிறோம் என்பதுவே எமது எதிர்காலத்தை இம்மண்ணில் நிலைநிறுத்தும்.

6. பின்வரும் கூற்றுகளுள் மிகப்பொருத்தமான கூற்று எது?

(a) நம்மவர்கள் அவுஸ்திரேலியாவிற்கு பொருள் தேடி வந்தவர்கள் அல்ல.
(b) எல்லோருமே பொருள் தேடியோ அல்லது வளம் தேடியோ வந்தவர்கள் தான்
(c) எம்மிற் சிலர் பொருள் தேடிவந்தாலும் பெரும்பாலானவர்கள் உயிர் அச்சுறுத்தல் காரணமாகவே குடிபெயர்ந்தனர்.
(d) இவை எல்லாமே சரி.

7. பின்வரும் கூற்றுகளுள் மிகப்பொருத்தமான கூற்று எது?

(a) தமிழகத்தில் அடிப்படைத் தேவைகள் இன்றி மக்கள் வாடுகின்றனர்.
(b) தமிழ்கத்திலும் ஈழத்திலும் அடிப்படைத் வசதிகள் இல்லாமல் வாடுவோர் போரினால் அல்லற்படுகின்றனர்.
(c) ஈழத்தில் அடிப்படை வசதிகள் இன்றி மக்கள் வாடுகின்றனர்.
(d) ஈழத்தில் அடிப்படை வசதிகள் இன்றி மக்கள் வாழ்வதோடு போரினால் அல்லற்படுகின்றனர்.

8. இலங்கை பற்றிய பின்வரும் கூற்றுகளுள் தவறான கூற்று எது?

(a) போர் நடைபெறுவதால் மக்கள் வாழ்க்கை நிம்மதியற்றுக் கிடக்கிறது.
(b) வானிலிருந்து குண்டுகள் எந்நேரமும் வீசப்படலாம் என்ற நிலை காணப்படுகிறது.
(c) அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்ற போதிலும் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர்..
(d) அங்கு மக்கள் பெருமளவில் கொல்லப்படுகின்றனர்.

9. மிகவும் பொருத்தமான கூற்றைத் தெரிவுசெய்க.

(a) வளர்ச்சியடைந்த நாடொன்றில் வாழ்வதனால் நாம் அடிப்படைத் தேவைகளை விட்டுவிட்டு எமது மக்களுக்கு உதவவேண்டும்.
(b) இந்நாட்டின் பொருளாதாரம், கலை, பண்பாடு என்பவற்றில் நாம் காத்திரமாகப் பங்களிப்பதுடன் எமது சமூகம் பற்றியும் சிந்திக்கவேண்டும்.
(c) மேற்கூறிய இரண்டும் சரியானவை
(d) மேற்கூறிய எல்லாமெ தவறானவை

10. எமக்கு முன்னே உள்ள முக்கிய பணி என்று உரைப்பகுதி சொல்வது:

(a) தமிழ்ப் பணியில் ஈடுபடுவோர் ஒற்றுமையாக செயற்படவேண்டும்.
(b) எமது உறவுகளுக்கு ஏதாயினும் ஒரு வழியில் உதவவேண்டும்
(c) இம்மண்ணில் எம்மை நிலை நிறுத்தவேண்டும்.
(d) இவை எல்லாம் சரியானவை.

## வினாக்கள் 11-15: பின்வரும் கூற்றுக்களுடன் தமிழ் அறிஞர்களைத் தொடர்புபடுத்துக.

11. தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய தமிழகப் பேராசிரியர்.

12. சிலப்பதிகார யாத்திரை என்ற நூலை எழுதிய ஈழத்துப் பேராசிரியர்

13 சிறந்த தமிழ் நாவல்களைத் தந்த தமிழகத்தின் தமிழ்ப் பேராசிரியர்

14 சிலப்பதிகாரம் என்ற காப்பியத்தை ஆராய்ந்து யாழ் நூல் தந்தவர்

15 சங்க இலக்கியங்களை பரிசோதித்துப் பதிப்பித்த தமிழ்த் தாத்தா

| | |
|---|---|
| **(a)** சுவாமி விபுலானந்தர் | **(b)** பேராசிரியவர் மு. வரதராசன் |
| **(c)** பேராசிரியர் பொன் பூலோகசிங்கம் | **(d)** உ. வே. சாமிநாதையர் |

**வினாக்கள்: 16-20 பின்வரும் பாடல் அடி எந்த நூலில் வருகிறது என்பதைத் தெரிவு செய்க.**

16. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் போற்றலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்

17. யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா

18. கூலி மிகக் கேட்பார் கொடுப்பதெல்லாம் தாம் மறப்பார்
வேலை மிக வைத்திருந்தால் வீட்டினிலே தங்கிடுவார்

19. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

20. பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்

| | |
|---|---|
| **(a)** புறநானூறு | **(b)** சிலப்பதிகாரம் |
| **(c)** திருக்குறள் | **(d)** பாரதியார் - கண்ணன்பாட்டு |

**வினாக்கள்: 21-22 கணினித் தமிழ்**

21. தமிழரின் மொழி, கலை, அரசியல் தொடர்பான தகவல்களையும் நிகழ்ச்சிகளின் தொகுப்பையும் உடனுக்குடன் வழங்கும் அவுஸ்திரேலிய இணையத் தளம்.

(a) கலாபம்
(b) ஆறாம் திணை
(c) தமிழ் நாதம்
(d) பதிவுகள்

22. இணையம் மூலமாக கேட்கக்கூடிய இரு வானொலி நிகழ்ச்சிகள்

(a) எஸ்.பி.எஸ் மற்றும் அவுஸ்திரேலிய தமிழ் வானொலி
(b) பி.பி.சி மற்றும் எஸ்.பி.எஸ்
(c) இன்பத்தமிழ் மற்றும் அவுஸ்திரேலிய தமிழ் வானொலி
(d) இவை எல்லாம்.

**வினாக்கள்: 23-25: பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டு பிடியுங்கள்.**

23. Unicode
24. Email
25. Etext

| | |
|---|---|
| **(a)** இயங்கு தளம் | **(c)** ஒருங்குறி |
| **(b)** மின்னெழுத்து | **(d)** மின்னஞ்சல் |

அடுத்த பக்கத்தில் தொடரும்.

## வினாக்கள்: 26-30 பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் பிழையாக எழுதப்பட்ட சொல்லுக்குப் பதிலாக சரியான சொல்லைத் தெரிவு செய்க.

26. விமலன் 12ஆம் ஆண்டுப் பரீட்சைக்குத் தமிழை ஒரு பாடமாக எடுத்து அதிக மதிப்பெண்கள் பெற்றமை பல்களைக்களக அனுமதிக்கு உதவியது

(a) பல்களைக்கலக
(b) பல்கலைக்கழக
(c) பல்கலைக்கலக
(d) பல்கழைக்கழக

27. முயர்ச்சி திருவினையாக்கும் என்ற முதுமொழியை எங்கள் பாட்டி அடிக்கடி எமக்குக் கூறுவார்.

(a) முயற்ச்சி
(b) முயற்சி
(c) முயர்ற்சி
(d) முயர்ச்சி

28. தனது ஆண்டுறுதிப் பரீட்சை வினாத்தாள் இலகுவாக இருந்ததாக தம்பி கூறினான்.

(a) ஆண்டுரிதி
(b) ஆண்டு உறுதி
(c) ஆண்டிருதி
(d) ஆண்டிறுதி

29. பவழவிழா கண்ட கவிஞர் அம்பி அவர்களின் தமிழ்க் கவிதைச் சிறப்பினைப் பாராட்டிப் பேசினர்.

(a) பவலவிழா
(b) பவளவிழா
(c) பவழவிழா
(d) பவழவிளா

30. தேணினுமினிய தமிழ் மொழியைப் போற்றி வாழ்த்துப் பாடியவர் பாரதியார்.

(a) தேனினுமிணிய
(b) தேநினுமினிய
(c) தேனிணூமினிய
(d) தேனினுமினிய

## வினாக்கள்: 31-35 பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31. அண்மையில் டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட தமிழ் நடிகர்

(a) விக்ரம்
(b) தங்கர் பச்சான்
(c) விஜய்
(d) திரிசா

32. கதாநாயகி வாயால் ஒரு சொல் தானும் பேசாது சிறப்பாக நடித்து பலரின் பாராட்டுதல்களையும் பெற்ற திரைப்படம்

(a) சிவாஜி
(b) மொழி
(c) அழகிய தமிழ் மகன்
(d) கஜினி

33. பள்ளிக்கூடம் என்ற படத்தை இயக்கியவரும் அதில் நடித்தவரும்

(a) தங்கர் பச்சான்
(b) அமிதா பச்சன்
(c) சங்கர்
(d) மணிரத்தினம்

34. அண்மையில் சிட்னிக்கு வருகை தந்த நகைச்சுவை நடிகர்

(a) விவேக்
(b) வடிவேலு
(c) ரஜனி
(d) கார்த்திக்

35. தமிழ் அகதிகளின் கண்ணீர்க்கதையை கூறும் திரைப்படம்

(a) சிவாஜி
(b) இந்தியன்
(c) இராமேஸ்வரம்
(d) நள தமயந்தி

## வினாக்கள்: 36-37 பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

36. அவுஸ்திரேலியாவைச் சேராத எழுத்தாளர்

(a) லெ முருகபூபதி
(b) பிரபஞ்சன்
(c) கவிஞர் அம்பி
(d) ஆ சி கந்தராஜா

37. அவுஸ்திரேலியத் தமிழ் எழுத்தாளர் விழா 2007 நடைபெற்ற நகரம்

(a) கன்பரா
(b) மெல்பேர்ன்
(c) சிட்னி
(d) பிரிஸ்பேன்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள்: 38-40 இவ்வினாக்களுக்குரிய பதிலை அதன் கீழ் கொடுக்கப்பட்ட நிரலில் இருந்து தெரிவு செய்க.**

38. ஏதாயினும் ஒரு தலைப்பை அல்லது பொருளை எடுத்து அதற்கு சார்பாகவும் எதிராகவும் இரு அணிகளாகப் பிரிந்து கருத்துக்களை முன்வைத்தல்

39. ஏதாயினும் ஒரு நூலைப் பற்றி ஆய்வு செய்து அதன் சிறப்புகள் பற்றியும் குறை நிறைகளைப் பற்றியும் எடுதுரைக்கும் அரங்கு

40. எதாயினும் ஒரு தலைப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட கவிஞர்கள் எழுதிய கவிதைகளை ஒரே அரங்கில் படித்தல்

| | |
|---|---|
| **(a)** கருத்தரங்கு<br>**(b)** கவியரங்கு | **(c)** பட்டிமண்டபம்<br>**(d)** விமர்சன அரங்கு |

**வினாக்கள்: 41-45 பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

41. பாட்டைப் பண்ணோடு பாடி மகிழ்ந்தோம். இவ்வாக்கியத்தில் தொக்கு நிற்கும் எழுவாய்

(a) அவர்கள்
(b) நீங்கள்
(c) நாங்கள்
(d) நிவிர்

42. ஒரு கிலோ திராட்சை என்ன விலை? இங்கு திராட்சை என்பது

(a) பொருட்பெயர்
(b) குணப்பெயர்
(c) இடப்பெயர்
(d) காலப்பெயர்

43. கணக்கு வழக்கின்றிக் கண்மூடித்தனமாகச் செலவு செய்தல்

(a) அள்ளிக் குவித்தல்
(b) ஆறப்போடல்
(c) ஆலாய்ப் பறத்தல்
(d) அள்ளியிறைத்தல்

44. தகுதி கண்டு உதவுக என்ற கருத்தைத் தரும் பழமொழி

(a) புத்திமான் பலவான்
(b) பாத்திரமறிந்து பிச்சையிடு
(c) திக்கற்றவனுக்கு தெய்வமே துணை
(d) முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

45. நானிலம் போற்ற வாழ்க! இதில் வரும் நானிலத்தில் அடங்காதது

(a) மருதல்
(b) பாலை
(c) நெய்தல்
(d) குறிஞ்சி

அடுத்த பக்கத்தில் தொடரும்.

## வினாக்கள்: 46-50 மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

46. காப்பிய மாந்தருள் தமக்குள் உடலால் மோதிக்கொண்ட சகோதரர்கள்

(a) தருமனும் வீமனும்
(b) கும்பகருணனும் இராவணனும்
(c) வாலியும் சுக்கிரீவனும்
(d) பரதனும் இலக்குவனும்

47. சனகன், அருச்சுனன், கண்ணன், துரியோதனன், சடாயு ஆகிய இலக்கிய மாந்தருள் நட்பினால் புகழ்பெற்றவர்கள்

(a) கண்ணனும் அருச்சுனனும்
(b) அருச்சுனனும் கர்ணனும்
(c) சனகனும் சடாயுவும்
(d) மேற்கூறிய எல்லாம்

48. இலக்கியப் பாத்திரங்களில் அரசியலில் ஈடுபட்ட பெண்கள்

(a) மண்டோதரியும் கோசலையும்
(b) கைகேயியும் தாரையும்
(c) சுமித்திரையும் குந்தியும்
(d) இவர்கள் எல்லோரும்

49. மகாபாரதக் கதையில் வரும் பாஞ்சாலி சபதம் என்ற பகுதியை மட்டும் எடுத்துத் தனியொரு காப்பியமாகப் பாடியவர்

(a) மகாகவி பாரதியார்
(b) புரட்சிக்கவி பாரதிதாசன்
(c) மனோன்மணியம் சுந்தரனார்
(d) கவிமணி தேசிகவினாயகம்பிள்ளை

50. தங்கத் தாத்தா என அழைக்கப்பட்ட ஈழத்துப் புலவர்

(a) நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
(b) சுவாமி விபுலானந்தர்
(c) மறைமலை அடிகள்
(d) கல்கி கிருஸ்ணமூர்த்தி

அடுத்த பக்கத்தில் தொடரும்.

## வினாக்கள்: 51-55 பின்வரும் உரைப்பகுதியில் கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல் கொண்டு நிரப்புக.

அரங்கேற்றம் பண்ணத்தான் பணமில்லை.

தங்குவதற்கு நிரந்தர இடமில்லாமல் ஊர் ஊராகப் போய் கூடாரம் அடித்து ஊசி மணி விற்றுப் பிழைக்கும் நாடோடிக் கூட்டத்திலிருந்து ஒரு 'நாட்டியப் பேரொளி' உருவாகியிருக்கிறார்.

திருச்சி தேவராயனேரி நரிக்குறவர் பகுதி முழுவதுமே அந்த நாட்டியப் பெண் சுவேதாவை நினைத்துப் பூரித்துப் போய்க் கிடக்கிறது.

எம் பொண்ணுதான் சுவேதா. வட இந்தியாவின் குஜராத் மாநிலத்திலிருந்து பஞ்சம் பொழைக்க வந்த நாங்கள் ஊர் ஊராகப் போய் ஊசிமணி, பாசி மணி விற்கிறோம். கஸ்டத்தோடு கஸ்டமாக எம் பெண்ணை எட்டாவது வரை படிக்க வைத்தோம். அவள் மூன்றாவது படிக்கிறபோதே அவள் ஆசிரியர்கள் எல்லாரும் சுவேதா நன்றாக நடனம் ஆடுகிறாள். அவளை நடன வகுப்பில் 51. ---------------------------- என்று சொன்னார்கள். நானும் சரி படித்துப் பார்க்கட்டும் என்று அரை மனதோடு சேர்த்துவிட்டேன். ஆனால் எம் பெண்ணால் இன்று எமக்கு எவ்வளவு பெருமை தெரியுமா?' 52. ---------------------- சிரித்துக் கொண்டார் சுவேதாவின் அப்பா மகேந்திரன்.

நான் தினமும் எங்கள் வீட்டில் பயிற்சி செய்வதைப் பார்த்துவிட்டு எங்கள் 53. ---------- நிறையப் பெண்கள் நாட்டியம் கற்க ஆரம்பித்துவிட்டார்கள். ஏன் எங்கள் வீட்டிலேயே என் தம்பி எனக்குப் போட்டியாக ஆடுகிறான். இதைத் தான் நான் எதிர்பார்த்தேன்! 54. ----------- பேசுகிறார் சுவேதா. அவருக்கு ஒரே ஒரு ஆசை. தனது நடன அரங்கேற்றத்தை வி.ஐ.பிக்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யவேண்டும்! அதற்கு மிகுந்த செலவாகுமே! என்னிடம் பணம் இல்லை. நான் என்ன தான் செய்யலாம்? கண் கலங்குகிறார் நாளைய 55. -------------------.

நன்றி: ஆனந்த விகடன் 11.04.2007

## வினாக்கள்: 56-65 ஆக்கத்திறன் வினா

பின்வரும் சம்பவத்தை கற்பனை செய்யுங்கள். பின் தொடர்ந்து எழுதுங்கள். உங்கள் ஆக்கம் குறைந்தது 80 சொற்களில் அமைந்திருக்கவேண்டும்.

அவுஸ்த்திரேலியத் தமிழ்ப் பட்டதாரிகள் சங்கத்தினால் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட தமிழ் ஊக்குவிப்புப் போட்டியொன்றில் உங்களுக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது. பரிசளிப்பு விழாவில் பதக்கத்தை வாங்கிக்கொண்டு வீடு திரும்பும்போது அரைவாசி வழியில் உங்கள் வண்டி நின்று விட்டது. அப்போது இரவு 11 மணி. வீதி விளக்கும் சரியாக எரியவில்லை. தூரத்தில் ஒரு வண்டி வேகமாக வரும் சத்தம் கேட்டது. திடீரென்று … … … … … …

Blank Page